பள்ளிக் கல்வித் துறை – பொதுத் தேர்வுகள் – 10ம் மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் – முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறை – கைவிடல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை

அரசாணை (நிலை) எண்.91

நாள் 11.05.2017
திருவள்ளுவராண்டு 2048
ஹேவிளம்பி ஆண்டு
சித்திரை, 28

படிக்கப்பட்டவை

1) 11.05.2017 அன்று நடைபெற்ற உயர்மட்டக் குழு தீர்மானம்.

**ஆணை:**

பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களை மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதல், இரண்டு மற்றும் மூன்று இடங்கள் என்ற வகையில் அறிவிக்கும் முறை இதுவரை பின்பற்றப்பட்டு வந்தது. கற்போருக்குள் ஒரு ஆரோக்கியமான போட்டி நிலவ வேண்டும் என்பதற்காக இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

2. மாணவர்களுக்கு இடையேயான போட்டி இன்றைய அளவில் பள்ளிகளுக்கு இடையேயான போட்டியாக உருமாற்றமடைந்துள்ளது. ஒவ்வொரு பள்ளியும் மாவட்ட அளவில் மாநில அளவில் பெறும் மதிப்பெண்களை முக்கிய அடைவாகக் கருதி அதற்கான கடும்போட்டிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன்விளைவாக மாணவர்கள் கடும் மன அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாகின்றனர். முதல் வகையான மாணவர்களே போற்றிக் கவனிக்கப்படும் நிலையில் கடை மற்றும் இடை மாணவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கும், புறக்கணிப்பிற்கும் ஆளாகும் நிலை தென்படுகிறது. போட்டி மயமான கற்றல் சூழ்நிலையில் தாக்குப்பிடிக்க முடியாத பல குழந்தைகள் மன இறுக்கத்திற்கும் கடும் சோர்வுகளுக்கும் உள்ளாவதை அவ்வப்போது பெறப்படும் புகார்களின் வாயிலாக அறிய முடிகிறது.

3.கற்றல் என்பது தெரிதல், அறிதல், புரிதல், பயன்படுத்தல், வினவுதல், திறனடைதல், புதியன படைத்தல் என்ற பல்வேறு நிலைகளில் நடைபெறும் ஒரு அழகிய செயல்பாடாகும். இதில் எழுத்துப்பூர்வமான தேர்வின் மதிப்பெண்களே அதீத முக்கியத்துவம் பெற்று ஒரு சில மாணவர்களே போற்றப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டியதாக உள்ளது.

4. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் ( CBSE) உள்ளிட்ட பல பிற மாநிலக் கல்வி வாரியங்கள் இதே நிலையை கருத்தில்கொண்டு ஆரோக்கியமற்ற போட்டிச் சூழல்களை தவிர்க்கும் வகையில் தேச, மாநில முதன்மைகளை அறிவிப்பு செய்யும் நிலைகளை தவிர்த்து வந்துள்ளதை அறிய முடிகிறது.

5. மேற்கண்ட நிலைகள் குறித்து பள்ளிக் கல்வித் துறையின் உயர்மட்டக் குழு 11.05.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் விரிவாக விவாதித்தது. இதில், பல இலட்சம் மாணவர்கள் எழுதும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் ஒரு சில மாணவர்களை மட்டும் மாபெரும் வெற்றியாளர்களாக கருதி மாநில மற்றும் மாவட்ட தரப்பட்டியல் அறிவிக்கும் நிலையை நடப்பாண்டு முதல் கைவிடலாமென்று ஆலோசனை வழங்கியுள்ளது. இதற்கு பதிலாக பரந்துபட்ட நிலையில் மாணவர்களை அங்கீகரிக்கும் தனியொரு திட்டத்தை வடிவமைக்கலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளது.

6. மேற்கண்ட சூழலை அரசு கவனமாகப் பரிசீலித்து உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையிலும், மத்திய இடைநிலை வாரியத்தின் நடைமுறையின் அடிப்படையிலும் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது அரசுக்கு கொண்டுவரப்பட்ட புகார்களின் அடிப்படையிலும், மாணவர்களுக்கு ஏற்படும் அதீத மனஅழுத்தங்களை குறைக்கும் வகையிலும், ஆரோக்கியமற்ற போட்டிச் சூழல்களைத் தவிர்க்கும் வகையிலும் நடப்பு 2016–17 கல்வி ஆண்டு முதல் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறையை கைவிடலாம் எனக்கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது. இந்த நடைமுறையை உடனடியாக பின்பற்றுமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநரையும், பள்ளிக் கல்வி இயக்குநரையும் அரசு கேட்டுக் கொள்கிறது. இதற்கு மாற்றாக பரந்துபட்ட நிலையில் கல்விச் செயல்பாடுகள் உள்ளிட்ட பிற தனித்திறன்கள் உடைய சிறந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அரசுக்கு உரிய கருத்துருக்களை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர்
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து இயக்குநர்கள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

11/5/17

அரசு சார்புச் செயலாளர்